வசந்தா

December 6, 2015

# நம் மனமே நம்மை நிர்ணயிக்கிறது

**மனித வாழ்வில் பல முக்கிய இரகஸ்யங்களில் முதன்மையானது தலைப்பு.** வாழ்நாள் முழுவதும் அனுபவித்து அறிய வேண்டியது. சங்கம் அறிந்த உண்மையிது தீதும் நன்றும் பிறர் தர வாரா. **எளியதாகத் தோன்றினாலும் மலை போன்ற தத்துவம்.** கேட்கும் பொழுதே புரியும். இதன் கருத்தை பவராக அறிந்தால் நடைமுறை அஞ்ஞானம் வெல்லப்படும். எது செய்தாலும் வெற்றியில் முடியும். தத்துவம் தன்னை நிகழ்ச்சி மூலம் விளக்கும். 80 நாளில் உலகைச் சுற்றி வந்த Phileas Fogg என்ற இங்கிலீஷ் gentleman கதையையும் அதன் பல நூறு நிகழ்ச்சிகளையும் இக்கருத்தை விளக்க நான் பயன்படுத்துகிறேன். **அது 1872 ஆம் ஆண்டு. பகவான் பிறந்த ஆண்டு**. ஒரு லண்டன் நியூஸ் பேப்பர் உலகைச் சுற்றி வருவதைப் பற்றி எழுதியது. பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கு அலகாபாத் வழியாக 3 நாளில் ரயில் போகும் என்ற செய்தியைப் பிரசுரித்தபொழுது இடையில் 50 மைலுக்கு ரயில் இன்னும் போடப்படவில்லை என்பதை போடப்பட்டதாக அவசரமாக எழுதியது. இலண்டன் - பம்பாய் - கல்கத்தா - சிங்கப்பூர் - ஹாங்காங் - யோக்கஹாமா - சான்பிரான்ஸிஸ்கோ - நியூயார்க் - லிவர்பூல் - இலண்டன் என பயண காலத்தைக் குறித்துக் கூட்டி 80 நாள் என செய்தி வெளி வந்தது. 143 ஆண்டிற்கு முன் நடந்தது. கப்பல்கள் 12 நாளில் வரவேண்டியவை 11 நாளிலும் வரும் 13 நாளிலும் வரும். ரயிலும் குறித்த காலத்தில் வர ஆரம்பிக்காத காலம். புயல், மழை, மக்களுடைய தாக்குதல்கள் மலிந்த காலம். Bank of England இல் 55,000 பவுன் திருடு போயிற்று. திருடனைப் பிடிக்க முடியாது என்று Reform Club மெம்பர்கள் பேசிய பொழுது முடியும் என்று சிலர் வாதம் செய்தனர். உலகம் சுருங்கி விட்டதால் திருடன் பிடிபடுவான் என்றனர். Phileas Fogg உலகம் சுருங்கியது என்றவுடன் ஒருவர் விளக்கம் கேட்டார். 80 நாளில் உலகைச் சுற்றி வரலாம் என்றார். அன்று 100 முதல் 150 நாளில் சுற்றி வரலாம் என பெரும்பாலோர் நினைக்கும் பொழுது 80 நாள் நம்ப முடியாததாகத் தோன்றியது. கேட்டவர் திடுக்கிட்டார். 80 நாள் என்பது பிரயாண நேரம். மற்ற நிலைமைகளை நினைத்தால் முடியாது என்ற பொழுது Phileas Fogg 80 நாள் குறைந்தபட்ச காலம் என்பதை ஏற்றார். முறையாகப் பயன்படுத்தினால் 80 நாள் போதும், ஓரிரு நாள் குறைவாகவே முடியும் என்று Fogg கூறியது அனைவரையும் திடுக்கிடச் செய்தது. £4000 பந்தயம் செய்வீரா எனக் கேட்டார் ஒருவர். அடுத்தவர் மேலும் £4000 பந்தயம் என்றார். மூன்றாவது 4000மும் வந்தது. Fogg £20,000 பவுனுக்கு செக் கொடுத்து பந்தயத்தை ஏற்றார். எனக்கு கதை முக்கியமில்லை. தலைப்பு கதையில் வருவது முக்கியம். பந்தயம் போட்டவர்கள் Fogg மீது அனுதாபப்பட்டனர். சிரமங்களை எடுத்துக் கூறினர். ஒரு கப்பல் அரை நாள் தாமதமானாலும் பந்தயம் தோற்கும் என்றனர். Fogg சரியாக செய்தால் தவறு வாராது. வந்தால் அதுவே சமாளித்துக் கொள்ளும் என்றார். அவர் முதலில் சந்தித்தது 50 மைல் இடைவெளி. ஒரு யானையை வாங்கி அதில் பயணம் செய்கிறார். ஹாங்காங்கிலிருந்து கப்பலைத் தவற விடுகிறார். நியூயார்க்கில் கப்பல் 45 நிமிஷத்தில் தவறி விடுகிறது. இடையில் ரயிலை அமெரிக்க இந்தியர் தாக்கினர். அவர் வேலையாளை அவர்கள் பிடித்துக் கொண்டு போய் விட்டனர். அலகாபாத் அருகில் சதியில் எரிக்கப்படவிருந்த ராணியைக் காப்பாற்ற முனைந்து வெற்றி பெற்றார். இவரைத் தொடர்ந்த CID இவர் ஆளுக்கு போதை மருந்து கொடுத்து தொந்தரவு கொடுத்தார். அவர் புறப்படுமுன் பந்தயம் போட்டவர்கள் இது போன்ற தடைகளைச் சுட்டிக் காட்டி பந்தயம் முறையானதல்ல என்று கூறினர். ஒரு தலைப்பட்டது எனவும் எடுத்துக் காட்டினர். Fogg £40,000 சொத்துள்ளவர். பிரம்மச்சாரி. Punctuality அவருக்கு முக்கியம். 86°F இல் ஷேவிங் தண்ணீர் 84°Fஆக வந்ததால் வேலைக்காரனை டிஸ்மிஸ் செய்தவர். புது ஆள் அன்றே சேர்ந்தான். எதையும் முறையாக செய்பவர். கோட்டுகளுக்கு நம்பர் உண்டு. போட்ட தேதி ரிஜிஸ்டரில் குறிக்கப்படும். அடுத்து எந்த தேதியில் எது போட வேண்டும் என ரிஜிஸ்டர் கூறும். Bootsம் அப்படியே. இவர் எவ்வளவு சரியாக இருந்தாலும் சந்தர்ப்பம் மாறினால் என்ன செய்ய முடியும் எனக் கேட்டவருக்கு சந்தர்ப்பம் மாறாது, மாறினாலும் ஒத்துழைக்கும் எனப் பொறுமையாகப் பதில் கூறினார்.

அவர் கோபப்பட மாட்டார், அவசரப்பட மாட்டார், காரியம் அடியோடு கெட்டுப் போனாலும், எப்படி அதைச் சரி செய்வது என யோசிப்பார். எரிச்சல் வராது, எவரையும் குறை கூற மாட்டார். அதற்கு அதிகப்படி செலவானால் தயக்கமின்றி பணம் செலவிடுவார். அவர் வழியில் சந்தித்த தடைகள் ஏராளம். அவற்றைப் பொறுமையாக சமாளித்தார். அவருக்குக் காரியம் கூடி வர எது உதவியது என்பதே "நம் மனம் நிர்ணயிக்கிறது என்ற கருத்து". மனம் பெற்ற சக்திகள் எவை. எந்த சந்தர்ப்பத்தில் எந்த சக்தி எப்படி உதவியது என்பதை இந்நிகழ்ச்சிகள் மூலம் கூறித் தலைப்பை விளக்க முயலும் கட்டுரை இது. கடைசி நாள் இவரைத் தவறாக அரெஸ்ட் செய்தபொழுது உடனிருந்த ராணியும், வேலையாளும் அதிர்ந்து உடைந்தனர். அவர் நிலைகுலையாது அமைதியாக இருந்தார். இவர் பெற்றது ஆன்மீக அமைதி அது ஆங்கிலேயர் அறியாத சக்தி. எழுதியவர் பிரெஞ்சுக்காரர். ஒரு ஆங்கிலேயனை கதாநாயகனாக்கி அவனுக்கு இந்திய ஆன்மீக மௌன சக்தியை முறையான வாழ்வு மூலம் கொடுத்து பயணத்தை நடத்தி கதையை முடிக்கிறார். கடைசி 15 நிமிஷத்தில் நேரம் கடந்து தோல்வியுற்று வீட்டிற்குப் போய் அமைதியாக ஒரு நாளிருக்கிறார். உடன் வந்த ராணிக்கு உதவி செய்யப் போய் அவள் தன்னை மணக்கும்படிக் கேட்கிறாள். மணம் ஞாயிறன்று சர்ச்சில் நடக்காது என்ற விஷயம் இதுவரை அவர் புரிந்து கொள்ளாததையும், அவர் பொறுமையுள் புதைந்துள்ள **Self-determination** தன் வெற்றியைத் தானே நிர்ணயிக்கும் சக்தி வெளி வருவதையும் ஆசிரியர் அறிவுறுத்தும் பொழுது "நம் மனமே நம்மை நிர்ணயிக்கிறது" என்ற தத்துவம் காலத்தை வெல்வதையும், சதித்திட்டங்கள் முறிவடைவதையும், கடமை கர்மத்தையும் வெல்லும் என்பதையும், உன் மனம் உனக்கு அடங்கினால் உலகம் உனக்கடங்கும் என்ற ஆன்மீக தத்துவத்தையும் எடுத்துக் காட்டுகிறது. ஆங்கிலேயனுக்கு தன்னம்பிக்கையுண்டு. இந்தியனுக்கு தெய்வ நம்பிக்கையுண்டு, மனத்திற்கு தன்னம்பிக்கையை தெய்வ நம்பிக்கையாக மாற்றும் திறன் உண்டு என்பது கதையில் பல்வேறு வகையில் பல்வேறு இடங்களில் வருவதால் இக்கதை மூலம் இக்கருத்தை எழுத முற்பட்டேன்.

மற்றவர் ஆட்சேபணைகளை **Phileas Fogg** எப்படி எடுத்துக் கொள்கிறார். கப்பல் தாமதமானால் என்றவுடன் அதற்கு பதிலாக "அதுவும் சேர்ந்ததே" என்கிறார். அப்படிச் சொல்லும் பொழுது மனத்தில் என்ன நினைக்கிறார். நெடுநாளாக **Fogg** மாலுமியாக இருந்திருக்கிறார். அவர்களுக்கு நல்ல சம்பளம் உண்டு. அந்த சம்பளத்தில் **£ 40,000** சேமிக்க முடியாது. சுமார் **40** வயது வரை கப்பலில் மாலுமியாக இருந்த அனுபவத்தில் குறித்த நேரத்தில் செயல்படுதல், பொறுமை, புயலில் கப்பலைக் காக்கும் திறமை, எதிர்பாராத நிலைமை ஆபத்தாக மாறுவதைச் சமாளிக்கும் சமயோசிதம், எந்த பொருளை அவசரத்திற்கும், ஆபத்திலும், எப்படி மாற்றிப் பயன்படுத்தலாம் என்ற அனுபவங்கள் வெற்றியாக பெரும் தொகை கையில் சேரும்படி கற்றிருக்கிறார். கப்பல் மாலுமிகள் Wine, Whisky, Claret போன்ற நயமான wine சாப்பிடுவதில்லை. Rum என்பது காரமான கடுமையான சாராயம். அதைச் சாப்பிட்டால் தூங்கலாம். வேலை செய்ய முடியாது. கப்பலில் வேலை கடுமையானது, கரடுமுரடானது. வாழ்நாள் முழுவதும் கரடுமுரடான வாழ்க்கையை வாழ்ந்தும் அவருக்கு நயமான Wine, Claret, Sherry சாப்பிடும் பழக்கம் உண்டு. அதாவது கடுமையான சூழலில் அனைவரும் கரடுமுரடான பழக்கம் பெறும் பொழுது **Fogg** இனிமையான பழக்கம் பெற்றுள்ளார். இது உடல் பெற்ற தவம். உரத்த குரலில் மட்டுமே கப்பலில் பேச முடியும். கப்பலில் வேலை செய்து மென்மையான குரலில் ஒருவர் பேச வாயும், மனமும் மௌனம் பெற வேண்டும். நிலைமை எதுவானாலும் Fogg முகம் வேறுபட்ட உணர்ச்சிகளைக் காட்டாது. சங்கீதம் அதுவும் சாகித்தியம் ஆன்மீகமாகும். பாட்டு எழும் பொழுது அது பல உச்சகட்டங்களைத் தொடும் பொழுது கை அசையும், உடல் அதிரும், முகம் கோணலாகப் போகும். அவற்றை சேஷ்டை என்பர். சேஷ்டையைப் பொருட்படுத்தாமல் சங்கீதத்தை நிறைவேற்றுவது சாதனை. ஒருவரால் சேஷ்டை செய்யாமல் சங்கீதத்தை இதுவரை நிறைவேற்ற முடிந்ததில்லை.

அப்படியொருவரிருந்தால் அவர் சித்த புருஷன். சங்கீதம் உயர்ந்த இடம், கப்பலோட்டுவது வெய்யில், மழை, ஆபத்து, கூச்சல் போடுவதாகும். அங்கு வேலை செய்து Fogg முகத்தில் உணர்ச்சியைக் காட்டுவதில்லையெனில் அவர் தபஸ்வி, தவ சிரேஷ்டர். அப்படி தவம் செய்பவர் கோபத்திற்குப் பேர் போனவர், சபிப்பார்கள். Foggக்கு கோபம் வந்ததில்லை, உள்ளே எழுந்து அடக்கும் அவசியம் ஏற்பட்டதில்லை. அவர் பூரண யோக சாதகன் போலிருக்கிறார். அவர் மனம் அந்த ஆழத்தில் அமைதியை அறியும். ஆட்சேபணை ஆழத்தை எட்டுவதில்லை, எட்டினால் அசைப்பதில்லை. ஆழத்தின் அமைதி அசையாத வரைக்கும் ஆபத்து வராது. வந்தால் வாய்ப்பாக மாறும். ராணியைக் காப்பாற்ற முனைந்த பொழுது பேராபத்தை அறைகூவியழைத்தார். என்ன செய்கிறோம் என்று அறியாதவர். அவர் வேலைக்காரன் பிணத்தின் உடையை அணிந்து எழுந்தான். அனைவரும் கஞ்சா மயக்கத்தில் தூங்கும் பொழுது இருட்டில் அவன் ராஜாவின் உடையைப் போட்டுக் கொண்டான். அவன் எழுந்ததை அங்கு உள்ளவர் பிணம் உயிர் பெற்றெழுந்து பெண்ணைத் தூக்கிப் போவதாக எண்ணி குப்புற விழ்ந்தனர். ராணியைக் காப்பாற்றி யானை மீதேற்றி தப்பித்தனர். ஆபத்து அனந்தமான வாய்ப்பாயிற்று. எதையும் திட்டமிட்டுச் செய்பவர் எந்தப் பலனையும் எதிர்பார்த்துச் செய்யவில்லை. எல்லாப் பலன்களும் அவரைத் தேடி வருகின்றன. தானாக அவற்றை நாடுவதில்லை. இது waking சமாதி விழிப்பில் சமாதி நிலை, மோட்சத்தைக் கடந்த நிலை, துறந்த நிலை. அவர் மனம் காலத்தைக் கடந்தது. அதனால் காலம் அவருக்குக் கட்டுப்பட்டது. ராணியின் கர்மம் அவருக்குக் கட்டுப்பட்டது. இம்மன நிலைகளை அவர் பெற்றிருந்தார். அவற்றை அறிந்து விளக்கிக் கூறும் நிலையில் அவரில்லை. அவை அந்நாட்டு வாழ்வில் பழக்கமாகவில்லை. விளக்கிக் கூறும் சொற்கள் உற்பத்தியாகவில்லை. நம் நாட்டில் படித்தவர் பலர் கூடிப் பேசும்பொழுது புது நிலைமைகள் எழுந்தால் அவற்றை கூற முடியாமல் திணறுபவர் "இது" "இது" எனப் பேசுவதைக் காணலாம். பொதுவாக அன்னை செயல்பட்ட விஷயங்களைப் பெறலாம், விளக்கிக் கூற முடியாது. சென்னையில் வீடுகளில் 10' அல்லது 12' நீர் நிரம்பி சேதம் ஏற்பட்டு, கரண்ட்டில்லாமல் தவிக்கும்பொழுது அன்னைக்கு அருள் மலர் சேவை செய்பவர் வீட்டினுள் நீர் வரவில்லை, கரண்ட் நிற்கவில்லை. இதை விளக்க முயன்றவர்களால் முடியவில்லை. "அது தான் Mother" "இது Mother ஆல் தான் முடியும்" என்றனர். அனுபவம் புதியதானால் விளக்கம் அடுத்த தலைமுறையில் உருப்பெறும். Phileas Fogg பெற்றவை ஆன்மீக அனுபவங்கள். அவற்றைக் கூறும் திறன் அவர் பெற்றதில்லை. 80 நாளும் கப்பலில், ரயிலில் அவர் Whist என்ற சீட்டாடுகிறார். அப்பொழுது பேசக்கூடாது, பேச முடியாது. சீட்டாட்டம் அவரது தியானம். பெரும்பாலும் வெற்றி பெறுவார். £20 ஒரு நாளைக்கு வெற்றி பெறுவதும் உண்டு. அதை அவர் எடுத்துக் கொள்வதில்லை. தர்மம் செய்து விடுவார். அஞ்சா நெஞ்சம், அபார தைரியம், பேசாத மௌனம், சிந்திக்காத மௌனம், பொறுமை பெற்றவர் Phileas Fogg. ஆட்சேபணைகள் மேலெழுந்தவாரியாக எழுவன. அவை அவரைத் தொடுவதில்லை. அதனால் எந்த காரியமும் கெடுவதில்லை. உலகை இருவர் I Class இல் சுற்றி வர £10,000 செலவாகும். அவர் £19,000 பவுன் செலவு செய்கிறார். பணம் அவருக்கு ஒரு பொருட்டல்ல. பணத்தை ஈட்டும் திறமை பெரியது. ஈட்டியவர் கடுமையாக இல்லாவிட்டாலும், எளிதில் செலவு செய்ய மாட்டார்கள். செலவு செய்தால் பணம் பெருகும் என்பது அவர் அனுபவம். £19,000 பவுன் செலவு செய்து £20,000 பவுன் பெறுகிறார். எவரால் காரியம் கெட்டுப் போனாலும், தானே பொறுப்பை ஏற்றுக் கொள்வார். பிறரைக் குறை கூறாதது பிரிட்டிஷார் வழக்கம். சதி செய்து ஆபத்தை ஏற்படுத்தும் பொழுது செய்தவர் மீது கோபப்படாதது, அவரைக் குறை கூறாதது முனிவருக்கும் சிரமமான காரியம். ஆத்ம நிலையில் மன நிலையில் சாதுவையும் கடந்தவர் Phileas Fogg. இங்கிலாந்தில் Gentleman என்ற பட்டம் நிலம் பெற்றவர்க்கேயுண்டு. பணம் சம்பாதித்து அதைப் பெற முடியாது. Gentleman என்பவரால் எவரையும் குறை கூற முடியாது. எவர் உதவியையும் பெற மாட்டார். பிறர் பொறுப்பை ஏற்பார். பந்தயத்திலும் வெற்றி பெற்ற பின்னும்

பணப்பலனை நாட மாட்டார். கொடுத்த வார்த்தை தவற மாட்டார். **Phileas Fogg** ராணிக்கு எந்த வார்த்தையும் கொடுக்கவில்லை. கொடுக்காத வார்த்தையைக் "காப்பாற்ற" முனைகிறார். பந்தயம் அந்த நாட்டில் **Gentleman** னுடைய பழக்கம். **Prime Minister** என்ற கதையில் இளைஞன் – சிறுவனை – ஏமாற்றி £70,000 பவுன் பந்தயம் போடச் சொல்லி குதிரைக்காலில் ஆணி அடித்து அவனைத் தோற்கடிக்கின்றனர். அந்நிலையில் ஏமாற்றியவர் ஜெயிலுக்குப் போவார்கள், பணம் கட்டுவது என்பதில்லை. இளைஞனின் தகப்பனார் **ex-Prime Minister**. தடை கூறாமல் £70,000 பவுன் கட்டினார். இளைஞன் இனி பந்தயத்திற்குப் போவதில்லை என்ற வார்த்தையைக் கொடுத்துக் காப்பாற்றினான்

இக்கதையை **Around the world** கதையாகப் படித்தபின், மீண்டும் எப்படி **Phileas Fogg**ஆல் தடைகளைச் சமாளிக்க முடிகிறது என்ற கண்ணோட்டத்துடன் படித்தால், இத்தலைப்பு விளங்கும். வாழ்வு முழுவதும் இத்தலைப்புக்குரியது. நண்பன் வாங்கும் நிலத்தை தானே டிசம்பரில் விரும்பியவன் சர்க்கார் தன் நிலத்தை எடுத்துக் கொண்டதை காண்கிறான். அவன் மனம் அவன் வாழ்வை நிர்ணயித்து விட்டது. இது எதிரான பலன். பலன் எப்படியிருந்தாலும் சட்டம் ஒன்றே. நல்ல பலனை உதாரணமாகக் காட்டி எழுத ஆசைப்பட்டால் பெரும் பலன் தரும். மகனை என்ஸைக்குளோபீடியாவை பாட புத்தகமாகக் கொள்ள வேண்டும் என்ற தகப்பனார் எடுத்த முடிவை Propedia விலக்கியது மிகப் பெரிய உதராணம். பையன் படிக்க சம்மதித்தால் எதைப் படிக்க வேண்டும் என்பதை கண்டறிய தகப்பனார் வரும் 10 ஆண்டில் 30 வால்யூம் படிக்க ஒப்புக் கெண்டார். அவர் மனம் அவர் செயலை நிர்ணயிப்பதை அன்னை விலக்கி, தானே நிர்ணயிக்க முன் வந்து Propedia என்ற 1000 பக்க அட்டவணையைத் தயாரித்து கலைக்களஞ்சியத்துடன் தந்தார். இந்தக் கதையில் சுமார் 100 முதல் 200 நிகழ்ச்சிகளுண்டு. ஒவ்வொன்றும் அவர் மனம் நிர்ணயித்தது. அக்கோணத்தில் கதையைப் படித்து பயன் பெறுவது பெரியது. புறப்படுமுன் **Fogg "80 days"** என்றார். மீண்டும் 3 முறை வெவ்வேறு இடங்களில் **"80days or less"** எனச் சொல்கிறான். முடித்தபொழுது அது 80 நாளாக இல்லை 79 நாள் எனக் கண்டார். மேலும் யோசனை செய்த பொழுது அது 78 நாளாக இருந்தது. 78 நாளில் பயணம் முடிந்தும் தோற்றார். தோற்றது எப்படி, அது என்னவாயிற்று என்பது முடிவு. அமெரிக்காவை அடைந்தபின் முதல் நிகழ்ச்சி கூட்டம். கூட்டத்தில் ஒருவர் **duel**க்கு அழைக்கிறார். ரயில் பயணத்தில் ஒரு பாதிரியார் பேசுகிறார். இவர் போகவில்லை. பாஸபார்ட்அவுட் என்ற வேலைக்காரன் போகிறான். **Duel**க்கு அழைத்தவர் தீடீரென வந்து மீண்டும் புது சண்டையை ஆரம்பிக்கிறார். சண்டை தொடங்கும் ஒரு நிமிஷமுன் அமெரிக்க இந்தியர் ரயிலைத் தாக்குகின்றனர். வேலையாள் அனைவரையும் காப்பாற்றுகின்றான். அவன் பிடிபட்டான். **Fogg** அவனைத் தேட முயன்று ராணுவ உதவி கேட்கிறார் கிடைக்கவில்லை. மீண்டும் கிடைக்கிறது. சிறைப்பட்டவனை மீட்கிறார். ரயில் போய் விட்டதால் 200 மைல் **sledge** வழுக்கும் படகில் போகிறார். கப்பல் தவறுகிறது, சொந்த படகை ஏற்படுத்துகிறார். கேப்டனை சிறைப்படுத்தி, கப்பலைக் கொளுத்தி நேரத்தில் இங்கிலாந்து வந்து அரெஸ்ட்டாகி, விடுதலை பெற்று, ஸ்பெஷல் ரயிலில் வந்து 15 நிமிஷம் தாமதமாகி தோற்கிறார். முடிவில் ஒவ்வொரு கட்டமும் தலைகீழ் மாறி உதவுவது எப்படியெனக் காண்பது தலைப்பை அறிய உதவும். **சட்டம் ஒன்றே:** முடிவு செய்வது மனம், நம் மனம், நிகழ்ச்சியில்லை. இக்கதையில் — **80 days — Phileas Fogg** சான்ஸ்பிரான்ஸிஸ்கோவில் ஒரு கூட்டத்தைக் கண்டார். ஒரே களேபரமாக இருந்தது. கைகலப்பு நிகழ்ந்ததாக நினைத்தார். பிறகு அது எலக்ஷன் கூட்டம் எனக் கண்டார். அமெரிக்காவில் மேயர், செனட்டர், காங்கிரஸ் பிரதிநிதி **MLA, MP** போன்றவை – ஜட்ஜ், ஹானரரி மேஜிஸ்ட்ரேட், கவர்னர் போன்ற எல்லா பதவிகளும் எலக்ஷன் மூலம் நிர்ணயிப்பார்கள். எலக்-ஷன் கூட்டம் உள்நாட்டு கலவரம் போலிருப்பது 1872இல் அமெரிக்க அரசியல் எனக் கண்டு அதை விட்டு வெளியேற முயன்ற நேரம் வெற்றி முழக்கம் – ஜே.கோஷம் – வாக்குவாதம், கைதட்டல் ஆகியவை பெருங்கலவரமாகி

Foggம் ராணியும், துப்பறிபவனும் கூட்டத்தில் மாட்டிக் கொண்டு உடுப்புகள் கிழிந்து உருண்டு எழுந்தனர். அந்த நேரம் அங்கு வந்த அமெரிக்க கர்னல் பிராக்டர் துப்பறிபவன் தலையில் பலமாக அடித்து உருண்டையாக வீங்கியது. Foggயைத் திட்டினார். இது duelக்கு அழைப்பு. Foggஅழைப்பை அப்பொழுது ஏற்க முடியாது. அதனால் 6வது மாதம் "உங்களை வந்து duelக்கு சந்திக்கிறேன். உங்கள் பெயர் என்ன?" எனக் கேட்டார். அவமரியாதை செய்தவருடன் – duel – சண்டையிட வேண்டும். என் பக்கம் நியாயமிருப்பதால் நான் ஜெயிப்பேன் என நினைத்தார். நேரே ஒரு கடைக்குப் போய் அனைவரும் புது உடை உடுத்து நியூயார்க் போக ரயில் ஏறினார். அந்த கர்னலும் அதே ரயிலில் வருவதைக் கண்ட ராணியும், வேலையாள் பாஸபார்ட்அவுட்டும் ஒருவர் கண்ணில் அடுத்தவர் படாதபடி ஜன்னலை மூடினர். Foggக்கு தூக்கம் சொக்கியது. கண் விழித்து சீட்டாட்டம் ஆடிய பொழுது கர்னல் பின்பக்கம் வந்து Foggயிடம் இந்த சீட்டு தவறு, நான் வேறு சீட்டு ஆடுவேன் என்றார். Foggகோபித்தார். Duelக்கு இருவரும் தயாரானார்கள். அடுத்த ஸ்டேஷனில் ரயில் நிற்கும்பொழுது duelயை நடத்த தீர்மானித்தனர். அடுத்த ஸ்டேஷனில் ரயில் வந்ததும் கார்டு "இங்கு ரயில் 2 நிமிஷத்திற்கு மேல் நிற்காது. Duelயை ரயில் நடத்துவோம்" என்றார். இருவரும் துப்பாக்கியுடன் தயாராகி ரயிலின் விசிலுக்காகக் காத்திருந்த சமயம் ரயில் 100 அல்லது 200 பேரால் தாக்கப்பட்டது. இன்ஜின் பிரிந்து ஓடிற்று. 2 மைலில் உள்ள இராணுவம் சப்தம் கேட்டு விரைந்து வந்து தாக்குபவர்களைத் தாக்கியது. கர்னலுக்கு பலத்த காயம். **வேலையாள் சிறைப்பட்டு விட்டான்.** Fogg வேலையாளைக் காப்பாற்ற இராணுவ உதவியை நாடினர், கிடைக்கவில்லை. தான் மட்டும் போக முடிவு செய்தார். அதைக் கண்டு வியந்த கேப்டன் 30 வீரர்களை அனுப்பினான். Fogg "பாஸபார்ட்அவுட் – வேலையாள் – உயிருடன் கிடைத்தால்" £1000 பவுன் – தலைக்கு £30 பவுன் – பரிசு தர முன் வந்தார். மறுநாள் காலை வரை செய்தியில்லை. மேலும் சிப்பாய்களை அனுப்ப யோசனை செய்த பொழுது, அரை மைல் தூரத்தில் துப்பாக்கி சத்தம் கேட்டது. Fogg சிறைப்பட்டவனை மீட்டு 30 வீரர்களுடன் வெற்றியுடன் திரும்பி வந்து பரிசை வினியோகம் செய்தார். அங்கிருந்து 200 மைல் போனால் ரயில்வே ஸ்டேஷன் வரும். அங்கிருந்து 400 மைல் ரயிலில் பிராயாணம் செய்து நியூயார்க்கை அடையலாம். Sledge வழுக்குப் படகில் 200 மைலையும் ரயிலில் 400 மைலையும் கடந்து நியூயார்க் வந்து கப்பல் 45 நிமிஷமுன் போய் விட்டதாக அறிந்தார். அன்றிரவு ஹோட்டலில் தங்கி காலை துறைமுகம் வந்தார். எந்தக் கப்பலும் புறப்படும் நிலையிலில்லை. ஒரு கப்பல் புறப்படும் நிலையிலிருப்பதைக் கண்டார். அது போர்டோ என்ற பிரெஞ்ச் துறைமுகம் கல் ஏற்றிப் போவது. பயணிகளை ஏற்பது அதன் வழக்கமில்லை. Fogg கேப்டனை அல்லது முதலாளியைப் பார்க்க விரும்பினார். அவர், பேசுபவர், "நான் தான் கேப்டன், நானே முதலாளி, பயணிகளை நான் ஏற்க மாட்டேன். லிவர் பூல் என் கப்பல் போகாது" என்றார். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருவேன் என்றார் Fogg. $ 200 கொடுத்தாலும் வராது எனப் பதில் வந்தது. $ 2000 டாலர் தருவேன் என்று மறுபதில் வந்தது. "தலைக்கு" என்று கூறி £8000 டாலர் கொடுத்து கப்பல் ஏறினர். ஒரே நாளில் 13 மாலுமிகளுடனும் தனியாகப் பேசி கேப்டனை அறையில் அடைத்து கப்பலை லிவர்பூலுக்குத் திருப்பினார். நிலக்கரி போதாது எனக் கண்டு கேப்டனை விடுவித்து கேட்ட பொழுது கேப்டன் துடித்தான், திட்டினான், கொதித்தான். Fogg கப்பலை $60,000 டாலருக்கு வாங்கி அதன் மரப்பகுதிகளை எரித்து லிவர்பூல் வந்தார். அது பிரிட்டிஷ் மண் என்பதால் துப்பறிபவன் அவரைக் கைது செய்தான். கஸ்டம்ஸ் அறையில் காவலில் வைத்தான்.

4 மணிக்குப் பின் பாங்க திருடன் 3 நாள் முன் கைதானான் என அறிந்த துப்பறிபவன் Foggயை விடுதலை செய்தான். கைதான பொழுதும், கடந்த 4 மணியும் பொறுமையாக இருந்த Fogg தன் இரு கைகளையும் பின்வாங்கி துப்பறிபவன் முகத்தைக் குத்தினார். விரைவாகப் போய் ஸ்பெஷல் ரயிலை ஏற்பாடு செய்து இலண்டன் வந்தபொழுது 15 நிமிஷம் தாமதமானதால் அமைதியாக வீட்டிற்குப்

போனார். ராணிக்கு தங்க ஏற்பாடு தன் வீட்டிலேயே செய்தார். மாலை 7 மணிக்கு ராணியை சந்தித்து, தன் சொத்து போய் விட்டது மீதி £1000 உள்ளது அதன் மூலம் அவளுக்குரிய வசதி செய்வதாகக் கூறினார். ராணியின் பெயர் அவுதா. அவள் மனம் இளகியது. Foggஇன் வீரம், இலட்சியம், கடமையுணர்வு, தியாகத்தைக் கண்டு வியந்து அவருக்கு பதில் கூற விரும்பி "என்னை மணக்கும்படி கேட்கிறேன்" என்றாள். மணி 8.20. அருகில் வசிக்கும் பாதிரியாரிடம் போய் மறுநாள் திருமண ஏற்பாடு செய்ய ஆளிடம் பாஸபார்ட்அவுட்டிடம் கூறினார். அவன் புளகாங்கிதமடைந்து பாதிரியாரைப் போய்ப் பார்த்தான். அவரில்லை. 20 நிமிஷம் காத்திருந்தான். வந்தவுடன் செய்தியை சொன்னான். பாதிரியார் மறுநாள் ஞாயிறு என்றும் திங்கள் கிழமை திருமணம் செய்யலாம் என்றார். பாஸபார்ட்அவுட் அன்று ஞாயிறு December 22nd என நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது பாதிரியார் அன்று December 21st என்றார். அது உண்மையானால் பந்தயம் தோற்கவில்லை. எதுவும் புரியாமல் Foggயிடம் ஓடி வந்து விபரம் கூற முடியாமல் அவரை இழுத்துக் கொண்டு வண்டி ஏறி "£100 பவுன் பரிசு" என்று வண்டிக்காரனிடம் கூறி Reform Club 8.42க்கு வந்து 8.45க்கு நண்பர்களை சந்தித்து £20,000 பவுன் பந்தயத்தை Fogg ஜெயித்தார். சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து இலண்டன் வரை கதை. மேற்கூறிய நிகழ்ச்சிகளில் "Fogg மனம் எப்படி ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நிர்ணயித்தது" எனக் காண்போம்.

1) கர்னல் பிராக்டர் Foggயை திட்டினார், duelக்கு அழைத்தார். 6 மாதம் கழித்து அமெரிக்கா வந்து duel செய்வதாக Fogg கூறினார். Duel அவர்கட்கு மானப்பிரச்சினை. வீட்டில் பெண்களை தூக்கிப் போவது போன்றது. அரைநிமிஷம் தாமதிக்காமல் செயல்பட வேண்டிய காரியம். Fogg December 21 இல் இலண்டனில் இருக்க வேண்டும் என்பதால் அவர் இலண்டன் போய் duelக்காகத் திரும்பி வருவதாகக் கூறினார். Duelஇல் வெற்றி நியாயத்திற்கு என்பது அவர்கள் நம்பிக்கை. Fogg எந்தத் தவறும் செய்யவில்லை. கர்னல் துப்பறிபவன் தலையில் கொட்டி வீக்கம் எழுந்தது. Foggக்கு கோபம் வரவில்லை. கோபம் எழாத அமைதி போரையும் வெல்லும் சக்தி வாய்ந்தது. அவர் போகும் ரயிலில் கர்னலும் போவது duelயை ரயிலில் நடத்த முடியும் என்றாகிறது. அது அமைதியின் பவர். ரயிலில் மீண்டும் கர்னல் சீட்டாட்டத்தில் Foggயை சீண்டுகிறான். Duelஏற்பாடாயிற்று. Fogg மனம் திறன் நிறைந்தது. அதற்குள்ள சக்தி அபரிமிதமானது. அது duel செய்யாமல் வெல்ல வல்லது. ரயில் whistleக்குக் காத்திருந்தனர். அதே க்ஷணம் ரயில் தாக்கப்பட்டது. தாக்குதல் நின்றபொழுது Foggக்கு சிறு காயமுமில்லை. கர்னல் இடுப்பில் பலத்த காயம். அது Fogg சுட்டதால் ஏற்பட்டதல்ல. Fogg மனம் நேர்மையானது. நேர்மைக்கு வெற்றியுண்டு என அவர் நினைக்கிறார். Duel செய்யாமல் முழு வெற்றி Foggக்கு. Fogg சுடாமல் கர்னலுக்குப் பலத்த காயம். முடிவு Fogg மனத்தால் நிர்ணயிக்கப்பட்டது.

2) வேலையாள் சிறைப்பட்டான். அவன் அனைவர் உயிரையும் காப்பாற்றினான். அவன் உயிரைக் காப்பது Foggகின் கடமை. கடமை கர்மத்தையும், காலத்தையும் வெல்லும். இராணுவ உதவி முதலில் மறுக்கப்பட்டது. அவர் தைரியத்தைப் பாராட்டி 30 வீரர் வந்தனர். வந்தவர் சிறைப்பட்டவனை உயிருடன் காப்பாற்றினர். பரிசு பெற்றனர். கடமை Foggஇன் இலட்சியம். கடமை என்பது நிலைமையைக் கருதாது நியாயத்தைச் செய்வது. நியாயம் சத்தியம், சத்தியம் ஆத்மாவின் புறம், சத்தியத்திற்கு கர்மம் கட்டுப்படும். அதன் வழி காலமும் கட்டுப்படும். அவை கட்டுப்பட்டன. அவன் உயிரோடு பிழைத்தான். அவன் பிழைத்ததை நிர்ணயம் செய்தது அவர் மனம். மனம் ஆத்மாவின் பகுதி. மனத்தின் தீர்க்கமான எண்ணம் ஆத்மாவின் சொந்த எண்ணம். ஆத்ம சக்தி அதன் மூலம் வெளிப்படுவது. வெற்றி மட்டும் அதன் நிர்ணயம்.

3) அடுத்த ரயில் மறுநாள் என்றால் 12 மணி மேலும் தாமதமாகும். Sledge வழுக்குப் படகு கிடைத்தது. அதுவும் போலீஸ் இன்ஸ்பெக்டர் மூலம் கிடைத்தது எதிரி மனம் மாறி சேவை செய்ததாகும்.

முடிவில் Fogg £1000 பவுனில் ஒரு பகுதியை இன்ஸ்பெக்டருக்குக் கொடுப்பது இதன் தொடரான பிரதிபலிப்பு. விரைவாக நியூயார்க் போனாலும் கப்பல் தவறுகிறது. ஹாங்காங்கில் துப்பறிபவன் ஆளுக்கு போதை மருந்து கொடுத்து கப்பல் தவறியது, துப்பறிபவன் தொடர்வதால் தொடர்வது, துப்பறிபவன் முடிவில் தவறாகக் கைது செய்து, அதிலிருந்து Fogg தப்பித்தது, போராட்டமாக முன்கூட்டி அறிவிக்கிறது. Captainயைச் சிறைப்படுத்தி, கப்பலைக் கொளுத்தி, பெரும் பணம் கொடுத்தது, கப்பல் மீதியையும் Fogg கொடுத்தது Fogg Gentleman என உறுதிப்படுத்துகிறது. Fogg பயணத்தில் 100 சிறு பெரிய காரியங்களை சந்திக்கிறார். எல்லாவற்றிலும் – உதாரணமாக பிச்சைக்காரிக்கு £20 பவுன் தருவது – அவர் மனம் பின் வரும் நிகழ்ச்சிகளை நிர்ணயிப்பது தெரிகிறது. £20 பவுன் வீட்டு வேலைக்காரியின் ஆண்டு சம்பளம். அதை ஒரு பிச்சைக்காரி பெறுவது Fogg வாழ்வின் முழு வெற்றியைக் கடந்த வெற்றியைப் பெறுவதைக் காட்டும். வாழ்வில் அவர் இலட்சியம் gentleman எனப் பெயர் பெறுவது. அவர் பெற்றது ராணி அவுதாவின் நன்றி கலந்த விஸ்வாசமான அன்பு நிறை காதல். Gentleman என்பவர் இங்கிலாந்தில் 10,000 பேர் உண்டு. இது போன்ற தூய்மையான அன்பு நிறை உணர்வின் எழுச்சியைத் தரும் பெண் அந்நாட்டிலில்லை. வாழ்வில் ஆண் பெண்ணை நாடுவான். அந்நாட்டில் ஆண் அவள் முன் மண்டியிட்டு “என்னை மணந்து கௌரவிப்பாயா?” எனக் கேட்பான். இங்கு பெண் “என்னை மணப்பாயா?” எனக் கேட்கிறாள். ஆண்டவனை வரம் கேட்டுப் பெறுகிறோம். ஆண்டவன் வந்து தரிசனம் தந்து வரம் தருகிறேன், ஏற்பாயா எனக் கேட்டது உலகிலில்லை. Fogg பெற்றது பேறு. வாழ்வின் பெரு வரம். அது அவர் நினைக்காதது. ஆழ்மனம் நினைத்தது. 60 நாள் ஒரு அழகிய இளம் பெண்ணுடன் இரவும் பகலும் இணைந்தபொழுதும் அவள் மீது ஆசையெழாதது ரிஷியைக் கடந்த நிலை. இது மனம் மட்டும் எய்தும் நிலை உணர்ச்சியால் எட்ட முடியாது. அம்மனநிலையே அவருக்கு எப்பொழுதும் உள்ள மனநிலை. ஆண் கேட்க வேண்டியதைப் பெண் கேட்கிறாள் என்பது பெண் சுபாவத்திலில்லை. டேவிட் வக்கீல் பெண்ணுடன் 5 ஆண்டு பழகி அவள் மனத்தை அறியாமல் மனைவியை இழந்தபின் பிரயாணம் முடித்தபின் அத்தையின் யோசனையின் பேரில் வக்கீல் பெண்ணை “என்னை மணக்க விரும்பும் பெண் உனக்குத் தெரியும் என்று அத்தை கூறுகிறாள்” எனக் கேட்கிறான். அவன் கேட்காமல் அவளால் அதை செயலாலும் ஏற்க முடியாது. பெண் சுபாவம், கூச்சம் அவள் பெற்ற அச்சம், மடம், நாணத்திற்குரியது. அது தலைகீழே மாறி செயல்படுவது சத்திய ஜீவியம் பின்னால் வருவதை முன்கூட்டி அறிவிப்பதாக நான் கொள்கிறேன். மனித வாழ்வில் அனைத்தும் மனத்தால் நிர்ணயம் செய்யப்பட்டவை. அப்படியிருக்கும்பொழுது Fogg மனம் அவர் வாழ்வின் செயல்களை துல்லியமாக நிர்ணயிப்பது ஆச்சரியமில்லை. பந்தயம் Fogg இடம் வர சில நிமிஷங்கட்கு முன் “இரண்டு வெற்றித் துருப்புகள்” என்ற குரல் கேட்கிறது. ‘வாழ்வனைத்தும் யோகம்’ என்றார் பகவான். வாழ்வின் அசைவுகள் அனைத்தும் சகுனமாகும் என நாம் கூறலாம். Life Responseயை அறிந்தவர் எல்லா நிகழ்ச்சிகளையும் Life Responseஆக அறிவார். Fogg punctualityயை ஒரு பழக்கமாகக் கொள்ளவில்லை. பண்பாகப் பயிலுகிறார். நமக்கு ஒரு காரியத்தைக் குறித்த நேரத்தில் ஆரம்பிப்பது punctuality. Foggக்கு punctuality வாழ்வின் மூச்சு. ஆரம்பமும், முடிவும் குறித்த நேரத்திலிருப்பது அவருக்குப் punctuality. அது நடக்க செயலின் அனைத்து சிறு பாகங்களும் punctual ஆக நடக்க வேண்டும். நாம் அது போன்ற எந்த நிகழ்ச்சிகளையும் கண்டதில்லை.

அமைதியான மனநிலைக்குக் காலம் கட்டுப்படும். இடையூறு இருந்தால் காலம் கட்டுப்பட மனிதன் தன் பங்கை செய்ய வேண்டும். லிவர்பூல் கப்பல் தவறியது. அந்நிலையில் எவரும் செய்யக் கூடியதில்லை. இது வந்ததற்குரிய காரணங்கள் பல. துப்பறிபவன் ஹாங்காங்கில் செய்த சதி. எதிரியை எதிரியென அறியாமல் அவனுடன் பயணம் செய்வது. கர்னல் பிராக்டர் இன்ஸ்பெக்டருக்கு எதிரி. Foggஅவன் சார்பாக அவன் பொறுப்பை ஏற்பது. இதன் விளைவாக வந்தது அமெரிக்கன் இந்தியர்

தாக்குதல். இவற்றிடையே மெடிசன் பௌவில் பிரிட்ஜ் தடையாயிற்று. பிரிட்ஜ் கலகலத்துப் போனதால் அதைக் கடக்க முடியாது என்ற நிலை எழுந்தது. Foggக்கு பிரிட்ஜ் தடையானதும் தெரியாது, தடை விலகியதும் தெரியாது. மனம் அமைதியானால் தடையெழாது, எழுந்தால் தானே விலகும் என்பதை அறிவுறுத்தும் செயலிது. கப்பல் தவறியபின் 3000 மைல் சிறு கப்பலால் தாண்டுவது இயலாது. அப்படி போர்டோ போகும் கப்பலைக் கொள்ளைக்காரனாக Fogg பறித்து லிவர்பூல் போவது ஒரு தீரச் செயல். அது கூடி வந்தது அவர் மனம் செய்த நிர்ணயம். முடிவில் கேப்டன் பெற்றவை பெரும் அதிர்ஷ்டம். செம்மை (Perfection) இருந்தால் குறை வராது. ஏனெனில் செம்மை முழுமையானது. Punctuality செம்மையானாலும், பகுதியின் செம்மை ஒரு பகுதியின் செம்மைக்கு மாறான, எதிரான, பகுதியின் செம்மை எழுவது மனத்தின் இயல்பு. அதுவே துப்பறிபவன் தொடர்ந்து முடிவில் கைது செய்வது. அடிப்படையில் Fogg மனம் ஆழ்ந்த அமைதி பூண்டுள்ளது நிர்ணயிப்பது முடிவு – 79ம் நாளே பயணம் முடிவது. பயணம் முடிந்தாலும் 15 நிமிஷ தாமதத் தோல்வி தோற்றம் உண்மையல்ல. உண்மை அடுத்த நாள் வெளி வருகிறது. உண்மை வெளிவரக் காரணம் திருமணம். Foggன் உண்மை பெரியது. ராணி Fogg வாழ்வில் வந்தது அதனினும் பெரியது. பயணம் 79 நாளில் முடிந்தது வெற்றியைப் பெரு வெற்றியாகக் காட்டுகிறது. 78ம் நாளே பயணம் முடிந்தது காலம் விரும்பி, மனத்திற்குக் கட்டுப்பட்டது என்பதன் உண்மை. பந்தயம் ஜெயிக்க 80 நாளில் பயணம் முடிய வேண்டும். 78 நாளில் முடிந்த பந்தயம் வினாடி தவறாமல் வெற்றியைக் கொண்டாடியது தன் Punctuality தன் perfectionயைத் தானே கொண்டாடியதாகும். பந்தயம் வெற்றி பெற்றாலும் Foggக்கு அதனால் பண லாபமில்லை. Gentleman பந்தயத்தை பந்தயமாக ஏற்பவன். அதனால் இலாபம் பெறும் நோக்கம் அவனுக்கில்லை. துப்பறிபவன் பெயர் Fix. அவன் மீது Foggக்கு துவேஷமில்லை. அவன் அவரைப் பின்பற்றியது தவறு. தவறு என்றாலும் அது அவன் கடமை. வேலையாள் Fixயை சந்தேகிக்கிறான். Reform clubஇல் சந்தேகப்பட்டு Fixயை அனுப்பியதாக பாஸபார்ட்அவுட் நினைக்கிறான். அவன் ஸ்காட்லண்டு யார்டு போலீஸ் இன்ஸ்பெக்டர், அவன் விரும்பினால் Fogg உடன் வேலையாளையும் சந்தேகப்பட்டு கைது செய்யலாம். அவன் போதை மருந்துக்கு வேலைக்காரன் பலியானான். Foggயிடம் வேலைக்காரன் Fix விஷயத்தைச் சொல்லியிருந்தால் ஹாங்காங்கிலேயே Fix விடப்பட்டிருப்பான் அல்லது நியூயார்க்கில் விடப்பட்டிருப்பான். வேலைக்காரன் சொல்லவில்லை. முடிவு வரை தொந்தரவு தொடர்வது பகுதியான செம்மையின் மறுபுறம். Gentlemanனுடைய பெருந்தன்மை Fixக்கும் Fogg £500 பரிசளித்தது. Fogg மனதில் வேற்றுமையோ துவேஷமேயில்லை. அவை இருந்தால் மனம் இந்த அமைதியைப் பெற முடியாது. தன் வேலைகளை நிர்ணயிக்கும் திறன் பெறாது. ராணி அவுதா பொறுமையின் பூஷணமாக கடைசி வரை அவனுக்கு ஆழ்ந்த மன உணர்ச்சியின் ஆதரவைத் தந்தது Foggக்கு மட்டும் கிடைக்கக்கூடிய ஆன்மீகப் பரிசு.

இக்கதையில் வேலைக்காரன் பிரெஞ்சுக்காரன். Fix அவனைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் “அவன் பிரெஞ்சுக்காரன். அவனால் பேசாமலிருக்க முடியாது” என்பான். பிரெஞ்சுக்காரன்கள் சிந்தனைக்குப் பேர் போனவர்கள். எளியவர் வளவள தொணதொண எனப் பேசுவார்கள். இத்தாலியர் உணர்ச்சி வசப்பட்டவர், கண்டவுடன் கட்டித் தழுவுவார்கள். உணர்ச்சி வயப்படாமல் அவர்களால் பேச முடியாது. ஆங்கிலேயர் எளிதில் பேச மாட்டார்கள். அமெரிக்கர்கள் 5 நிமிஷம் உட்கார மாட்டார்கள். போனில் பேசினாலும் உலவிக் கொண்டே பேசுவார்கள். கதாநாயகன் Fogg மௌனமானவர். கதை விறுவிறுப்பாக இருக்க வேண்டும் என்பதால் அவர் வேலைக்காரனை பிரெஞ்சுக்காரனாக்கினர். ஒவ்வொரு புது ஊர் வந்ததும் அவன் ஊரில் உள்ளே போவதும், அனைத்தையும் பார்வையிட்டு மகிழ்வதும், வம்புதும்பில் மாட்டிக் கொள்வதும் கதைக்கு சுறுசுறுப்பு அளிக்கிறது. Foggன் கடமை உணர்ச்சி முழுமையானது. ஐரோப்பியர், குறிப்பாக ஆங்கிலேயர் பெண்களை woman, ladies எனப் பிரித்து விட்டனர். Woman என்பவள்

பெண், படிக்காதவள்.வேலை செய்பவள், வாழ்நாளில் குளிக்காதவள், ஆண்டிற்கு £10 பவுன் சம்பளத்திற்கு வேலை செய்பவள். **Maid** வேலைக்குரியவள் என்பர். **Lady** என்பவள் சீமாட்டி, பெரிய குடும்பப் பெண், படித்தவள் ஒரு நாளைக்கு **3** தரம் உடையை மாற்றுபவள். ஒரு **Lady** அறையுள் வந்தால், அங்குள்ள அனைத்து ஆண்கள் எழுந்து மரியாதை செய்வார்கள். **Ladies** எதிரே **gentlemen** அதிர்ந்து பேச மாட்டார்கள். குடிப்பதற்கும் சட்டமுண்டு. சாராயம் **Whisky** பெண்கள் எதிரில் சாப்பிட மாட்டார்கள். **Wine** சாப்பிடுவார்கள். பெண்களை **ladies** அதிக மரியாதையுடன் நடத்துவார்கள். அவர்கள் தேவையை முதலில் கவனிப்பார்கள். **Fogg** இக்கதையில் **Prince Aouda**வின் தேவைகளைக் கவனிப்பது ராஜோபசாரமாகும் ஆண்கள் **ladies** இருக்கும் பொழுது கொச்சையான சொற்களைப் பேச மாட்டார்கள். ஒரு **lady** தவறான விஷயம் பேசினாலும் – உதாரணமாக சிங்கப்பூர் இந்தியாவிற்கு தெற்கேயுள்ளது என்றாலும் – எந்த **gentleman**னும் அது தவறு எனக் கூற மாட்டார்கள். **Ladies** பேசுவது, செய்வதைத் தவறு எனக் கூறுவது மரியாதையில்லை என்ற நாகரீகம் படைத்த நாடு அது. அதே சமயத்தில் ஓர் பெண் ஆணை **You are stupid** எனக் கூறலாம். ஆண் பெண்ணை அப்படிப் பேச முடியாது. **Fogg** இப்பண்பில் உச்சகட்டத்தில் **Prince Aouda**வுக்கு கௌரவம் செலுத்துகிறார். அவருடைய தைரியம், தாராள மனப்பான்மை, வீரம், பெருந்தன்மை, கடமை உணர்ச்சியின் பயனை முழுவதும் அனுபவித்து மனம் நன்றியால் நெகிழ்கிறது. அது நன்றியின் எல்லையைக் கடந்து பிரியமாவதை ராணி கவனிக்கிறாள். அதை **Fogg** அறியவில்லை. Hongkong-ல் கப்பல் தவறி விட்டது. ஒரு சிறு கப்பல் – **20** டன் – **800** மைல் போக ஏற்பாடு செய்கிறார்கள். சிறு கப்பல்களை **50** மைல் **100** மைல் போகப் பயன்படுத்துவார்கள். **800** மைல் அதில் போக முடியாது. டெல்லிக்கு சைக்கிளில் போவதைப் போன்றது. **Fogg** ராணியைப் பார்த்து "உங்களுக்குப் பயமாக இருக்கிறதா?" என்கிறார். அவள் "நீங்கள் உடனிருக்கும் பொழுது எனக்குப் பயமில்லை" எனப் பதில் கூறுகிறாள். அவருடைய துணை தைரியம் தரும் என்பது உண்மை. அதையும் கடந்து பெண்ணுக்கு தைரியம் தரும் வீரன் அவர் என்ற பொருள்பட ராணி பேசுவதை அவரோ, அவளோ அறியவில்லை. அது நன்றி எல்லையைக் கடந்து பிரியமாகும் மனநிலை. வேலையாள் அப்பொழுது அங்கில்லை. ஆனால் அது போன்ற நேரங்களில் ராணியின் மனம் அவனுக்குத் தெரிய வருகிறது. **Fogg** ராணியை ஏற்ற பொறுப்பு ஓர் விரதம். ஒரு புனித கடமை. அதைக் கடந்து அவர் கண்ணில் எதுவும் படவில்லை. கடைசி நாள் அவளே எழுந்து நின்று கையை நீட்டி, "என்னை மணப்பாயா?" என்று கேட்கும் வரை **Fogg**க்கு அவளைப் பெண், அழகான பெண், அன்பிற்குரியவள் என நினைக்க முடியவில்லை. ஆதரவுக்குரியவள், பெண், காப்பது என் கடன் என்பதைக் கடந்த எண்ணம் அவர் மனதில் எழவேயில்லை. அப்படி அவள் கேட்டவுடன் எழுவது ஆச்சரியம், அடுத்த நிமிஷம், அது அவள் பிரியம், அன்பு, காதல் என்று மனதில் பட்டு அவருடல் புல்லரிக்கிறது. அதை ஏற்று "நான் உன்னைப் புனிதமாகக் காதலிக்கிறேன்" என்றார். இது முனிவரைக் கடந்த ரிஷியின் நிலையைக் கடந்த யோகியின் நிலையையும் கடந்த தெய்வ நிலை. பகவான் ஸ்ரீ அரவிந்தர் பாஷையில் இதை தெய்வீக மனம் Overmind என்போம். கிருஷ்ண பரமாத்மா உறையுமிடம். **Fogg** ஏதோ ஓர் அம்சத்தில் அம்மன நிலையைப் பெற்றவர். மனித மனத்தைக் கடந்த நிலையிலுள்ளது முனிவர் மனம். இது மௌனம் நிறைந்தது. மௌனத்தைப் பெற்றவரை மௌனம் காத்தவர் என்பர். அவர் முனி. தெய்வ நிலையில் மௌனம் கனத்தது. அதை ஒரு படி கடந்தால் சத்திய ஜீவிய மௌனம் எழும். இக்கதையை எழுதியவர் பிரெஞ்சுக்காரர். அவர் பெயர் **Jules Verne** இதன் கரு **punctuality** ஆனாலும் அதன் உட்கரு மௌனம். அதைப் பெற்ற கதாநாயகன் ஆங்கிலேயனாக இருப்பதே பொருத்தம். அவ்வமைதி பிரெஞ்சுக்காரனுக்குரியதல்ல என ஆசிரியர் கதாநாயகனை ஆங்கிலேயராக வர்ணிக்கிறார். **இது கதையின் சிறப்பு**.

நம் மனமே நம்மை நிர்ணயிக்கிறது

இந்த ஆசிரியருக்கு இந்தியா முக்கியம். வேறொரு நாவலும் இந்தியாவில் நடப்பதாக எழுதியிருக்கிறார். இவர் எழுதிய 63 நாவல்களில் 10வது நாவல் இது – 80 Days – மூலம் பிரெஞ்சில் எழுதப்பட்டு பத்திரிகையில் வாரம் தோறும் Serial ஆக வெளி வந்தது. 1873இல் வெளிவந்தது. அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், ஸ்காட்லண்ட், அயர்லாந்து, ஆகியவை ஆங்கிலம் பேசும் நாடுகள். இந்தியா, பர்மா, சிலோன், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா ஆகியவை பிரிட்டிஷ் காலனிகள் என்பதால் ஆங்கிலம் சர்க்கார் மொழியாக வழங்குமிடங்கள். நாவல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு ஆங்கிலம் வழங்கும் எல்லா நாடுகளிலும் பிரபலமாய் விட்டது. அவர் எழுதியவை 63 நாவல்களானாலும், அவரை உலகப் புகழெய்த உதவியது இந்த நாவலாகும். இது நடப்பது 1872, பகவான் பிறந்த ஆண்டு. இதன் power மௌனம். அது இந்திய ஆன்மீக பொக்கிஷம். அதற்கும் பிரான்ஸ், இங்கிலாந்திற்கும் சம்பந்தமில்லை. மௌனம் மனத்தைத் தொட்டால் ஆங்கிலேயர் அலறுவார்கள். அன்னை கணவர் ரிச்சர்ட் ஓலமிட்டார் “நான் மடையனாகிறேன்” என்றார். Jules Verne இந்திய ஆன்மீக பொக்கிஷமான மௌனத்தின் சிறப்பை ஆங்கிலேய Punctuality மூலம் உலகுக்குத் தருவதற்காக எழுதப்பட்ட நூல் இது. **இதன் கரு:** நிர்ணயிப்பது மனம்; செயலை நிர்ணயிப்பது மனித மனம், நம் மனமே நம் செயலை நிர்ணயிக்கிறது. சீனாக்கடலில் சிறு கப்பல் சூறாவளியால் “எக்ஸ்பிரஸ் ரயிலின் வேகத்தைப் போல் 4 மடங்கு வேகத்தில் சீறியது”. ஆனால் ஆபத்தை விலக்கி ஷாங்காய் வந்தது என்பது மௌனம் உலகைக் காக்கிறது என்ற ஆன்மீகத் தத்துவம். அந்த மௌனமே – மனம் – யோக்கஹாமாவில் வேலையாளை முதலாளியுடன் சர்க்கஸில் மீண்டும் சேர்த்தது. மௌனம் தைரியத்தால் செறிவடையும். ராணுவ உதவியை மறுத்த காப்டன் அவர் தைரியத்தைப் பாராட்டி 30 வீரர்களை அனுப்புகிறான். பாஸபார்ட்அவுட் காயம் படாமல் உயிருடன் திரும்ப வேண்டும் என்ற Fogg உடைய முடிவை வாழ்வு செயல்படுத்துகிறது. முடிவாக ஆசிரியர் காலத்தின் இரகஸ்யத்தைக் கூறுகிறார். Fogg புறப்பட்ட பொழுது அவர் தன் மன உறுதியை, Punctualityயை நம்புகிறார். Reform club memberகள் கேட்பதற்கும் பாம்பேயில் கர்னல் கேட்பதற்கும் Fogg “இடையூறுகள் என்னைப் பாதிக்கா” என்கிறான். எதுவும் முடியாத நேரம் நடக்க ஆரம்பிக்கிறார். நம்மால் முடிந்ததைச் செய்து முடித்தால் மீதியை இறைவன் செய்வான் என்பது ஆன்மீக நம்பிக்கை. மனிதன் முடிக்குமிடத்தில் அன்னை ஆரம்பிப்பார் என்பதை அன்பர்கள் அறிவார்கள். மனிதனுடைய பிரச்சினை எப்படி சிரமத்தைக் கடப்பது என்பதல்ல. ஏராளமாக வரும் அருளை எப்படி என் மனத்துள்ளும் வாழ்வினுள்ளும் ஏற்பது என்பதே பிரச்சினை. சென்னையில் மழை வழக்கத்திற்கு மாறாக 150% அதிகமாகப் பெய்து புழலேரி, செம்பரம்பாக்கம் ஏரிகள் திறக்கப்பட்டதால் 3 லட்சம் வீடுகள் 10 அடி நீரில் மூழ்கின. சுமார் ஒரு வீட்டில் 3 லட்சம் சேதம். மொத்தம் ஒரு லட்சம் கோடி ரூபாய் சேதம். அருளை சூட்சுமமாக அறியும் அன்பர்கள் சில ஆண்டுகட்கு முன் இத்தொகை சூட்சும உலகில் அன்பர்களை நாடி வந்ததை அறிவார்கள். “சரி, வந்தது உண்மையெனக் கொள்வோம், போய் விட்டது. இனி செய்ய என்ன இருக்கிறது” என்பது அன்பர் கேள்வி. **என் பதில்:** அன்பர் மனம் இருக்க வேண்டிய நிலையிலிருந்தால் எதுவும் போகாது, அருளுக்கும் போகத் தெரியாது, அன்பர் உயர வேண்டிய உயரத்திற்கு உயர்ந்தால் அத்தனையும் மீண்டும் வரும், அபரிமிதமாகவும் வரும் என்பது அன்னை சட்டம். ஓர் அன்பர் Grace மலர் சேவையை நெடுநாளாக செய்பவர். இவர் ஒரு கோடி ரூபாய் ஓராண்டில் சம்பாதிக்கிறார். இவர் ஒரு மாதம் இத்தொகையை சம்பாதிக்கத் திட்டமிட்டு செயல்பட்டால் அது பலிக்கும். மற்றொரு அன்பர் தன் தொழிலை 3 கோடியிலிருந்து 10 கோடிக்கு வரும் பொழுது “கடன் பெறக் கூடாது” என்ற பழைய கொள்கையை மேற்கொண்டு வந்ததைத் தவற விட்டுவிட்டார். வாழ்க்கை வளரும் பொழுது பதவி, அதிகாரம் பலமடங்கு வருகிறது. அன்பர்கள் அதிகாரத்தை அதிக காரமாக செலுத்தினால் டெல்லி அறை கூவலிட்டு அழைத்தது அல்ப குணத்தால் அழியும். பிரியம், நல்லெண்ணம் பெரிய மனம். பிறருக்குப் பூரண சுதந்திரம் தருபவருக்கு வந்தது போகாது. பழைய சிறுமதிக்கு புதிய அருள் வாய்ப்பு

பலிக்காது. எவரும் அதிகமாக உழைக்கலாம். அறிவோடு திறனை உயர்த்தலாம். கடுமையை கொடுமையை எரிச்சலை, லஞ்சம் தருவதை அடியோடு நிறுத்தலாம். இவை பெறும் திறனை விரிவுபடுத்தும். போனது வரும். கடன் பாங்கிலும் வாங்க மாட்டேன் என்பது 1000 ஆண்டிற்கு முன் பிறந்த கட்டுப்பெட்டியின் சிறுமதி. அம்மனநிலைக்கு எந்த அன்னை வாய்ப்பும் 10 அடி தண்ணீராக வருமே தவிர, வியாபார வாய்ப்பாக வராது. என்ன செய்கிறோம் என்பதை விட என்ன மனநிலையில் செய்கிறோம் என்பது முக்கியம். லஞ்சம் கொடுப்பது தவறு என நம்பினால் லஞ்சம் கொடுக்கும் சந்தர்ப்பம் வராது என்பதை தெளிவாக, விவரமாக நம்பினால், அந்த சந்தர்ப்பம் வராது என்பதை தொழிலில் உள்ள அன்பர்கள் இங்கும் அங்குமாகப் பார்த்தாலும், எல்லா இடங்களிலும் அப்படி செயல்பட முடியும் என மனம் நினைப்பதில்லை. அப்படி நினைப்பவருக்கு அந்த சந்தர்ப்பம் நிச்சயமாக விலகும். அன்னையைத் தீவிரமாக அழைத்து வெள்ளிக்கிழமையிலிருந்த சிறுநீரகக் கல் திங்கள் கிழமையில்லை என்பதை அன்பர் கண்டார். அது ஒருவர் அனுபவம். பலர் அனுபவம் நமக்கு உதவும். லஞ்சம் கொடுத்தே பெரும் சொத்து சம்பாதித்தவர் இக்கொள்கையை ஏற்க முனைந்து புதுத்திட்டம் வரைந்தார். இது 2½ கோடி – 1990 இல் – நடைமுறை கணிசமான இலஞ்சம் தராமல் விண்ணப்பமே பாங்க்கால் ஏற்கப்படாது என்பது நிலைமை. அன்பருக்கு நம்பிக்கையில்லை. விண்ணப்பம் ஏற்கப்பட்டது. எவரும் பணம் கேட்கவேயில்லை. லோன் சாங்ஷனாயிற்று, புரியவில்லை. இந்த திட்டத்தை ஏற்க எவரும் முன் வராததால் பாங்க் வாடிக்கைக்காரரைத் தேடிக் கொண்டிருப்பதால், அன்பருக்கு தர்ம சங்கடம் ஏற்படவில்லை. உலகத்தின் நிலை நமக்கு கணக்கில்லை. நம் மனம் அதற்குரிய ஆழத்தில் லஞ்சத்தைப் பற்றியென்ன நினைக்கிறது என்பதே நமக்கு முக்கியம். பொய் சொல்லாதவருண்டு. அவர் மனம் பொய்யை நம்பும், ஆனால் பொய் சொல்ல மாட்டார் எனில் அடுத்த பெரிய கட்டம் அவருக்குப் பலிக்காது. மனம் பொய்யை நம்புவதை ஓரளவு குறைக்க முயன்றால் எந்த காரியம் தடையாக இருக்கிறதோ அது விலகும். மேலும் எதிர்காலத்தில் படிப்படியாக மனம் பொய்யை விட்டகல முடிவு செய்வது உதவும். பொய் சொல்லாதவர்க்கு எரிச்சல் வரும். எரிச்சல் உணர்வின் பொய்யாகும். காணிக்கை மெய்யால் வந்த பணம். காணிக்கை கொடுத்தவரும், காணிக்கையைப் பெறும் நிலையில் உள்ளவரும் பொய் விலகிய பணமுடையவர்கள். அவர்கள் லஞ்சம் என்ற கட்டத்தில் திட்டத்தின் எல்லா பாகங்களையும் தனித்தனியாக சமர்ப்பணம் செய்தால் லஞ்சம் அவர் சூழலை விட்டு விலகும். முடிவு செய்வது நம் மனம், அங்கு லஞ்சமில்லாவிட்டால் லஞ்சம் கொடுக்கும் அவசியம் வராது. எரிச்சல் மட்டும் பொய் அல்ல, குழப்பம், பொய், தாமதம் பொய், அதிகாரம் பொய், அவசரம் பொய். பொய்யின் எல்லா அம்சங்களையும் ஒரு திட்டத்தினின்று அன்பர் விலக்கினால், அவர் எதிர்கொள்ளும் தடைகள் விலகும். பெறும் திறனை பக்கவாட்டிலும், ஆழத்திலும் உயரத்திலும் அதிகப்படுத்தினால், அருள் அதிகமாகப் பலிக்கும், ஏற்பட்ட சேதம் வருமானமாகும். வியாபாரி புதிய சரக்கை மார்க்கட்டில் கொண்டு வர கடன் தர வேண்டும். சரக்கின் தரத்தை மார்க்கட் தெரிந்து கொண்டபொழுது கடன் தரும் அவசியமில்லை. மார்க்கட் அட்வான்ஸ் கொடுத்து வாங்கும். அன்பர் சரக்கு நாணயம், நம்பிக்கை, உண்மை, உழைப்பு, நல்லெண்ணம் ஆகியவை. ஒரு ஆபீசர் லஞ்சம் எதிர்பார்க்கிறார் எனில் நாம் அதை விலக்கி அவர் மனத்தில் உள்ள ஒளியை, அன்னையைக் காண முயன்றால், லஞ்சம் விலகும், காரியம் நடக்கும். அன்பருக்குத் தோல்வியில்லை. அவர் மனம் அன்னையில் லயிக்கும் வரை தோல்வியில்லை.

காலம் மாறும்பொழுது பழைய பழக்கங்கள் மாறும். உடை மாறுவது, உணவு மாறுவது முக்கிய மாறுதலில்லை. அது மாறலாம், அல்லது மாறாமலிருக்கலாம். அதற்கு அர்த்தமில்லை. ஆனால் மனித அறிவும் பண்பும் மாறுவதால் ஏற்படும் மாறுதல்கள் அர்த்தபுஷ்டியுள்ளவை. இந்த மாற்றங்களை ஏற்பது அவசியம். ஏற்க மறுப்பவர்களை பழைய பஞ்சாங்கம், கட்டுப் பெட்டி என்பார்கள். படிப்பு உலகில்

பரவுகிறது. இன்று படிக்க மறுப்பவன், படிப்பால் வரும் பெரும் பலனை இழப்பான். அது அவனுக்கு நஷ்டம். மின்சார வசதிகள் இன்று ஏராளம். அமெரிக்காவில் ஆமிஷ் என்ற ஒரு குழு மின்சாரத்தைப் பயன்படுத்த மாட்டார்கள். மின்சார வசதிகளை மறுப்பவன் பின்தங்கியவனாகிறான். ஒரு காலத்தில் மனிதன் காய்கனி, பச்சை மாமிசம் உண்டான், உடை உடுக்கவில்லை. இன்று அப்பழக்கங்களை மாற்ற மறுப்பவனை ஜெயிலில் போடுவார்கள். இதுவும் தவறு என்றாகாது, உலகம் ஏற்காது. காலம் மாறும்பொழுது பழக்கவழக்கங்களை மாற்றுபவன் நாகரீக மனிதன். பணத்தைப் பயன்படுத்த ஒருவர் மறுத்தால் அவருடன் யாராலும் பழக முடியாது. தொடர்பு கொள்ள இயலாது. அன்னையை ஏற்க, அவர் அருளை ஏற்று கிரகித்துப் பயனடைய மனம் விசாலமாக வேண்டும். இன்றைய நவநாகரீக மனிதனை விட 100 அல்லது 1000 மடங்கு மனம் விசாலமாக, இலட்சியமாக, தூய்மையாக, தெய்வீகமாக, புனிதமாக இருக்க வேண்டும். முதற்காரியமாக பொய் அறவே மாறி மெய்யாக வேண்டும். பேச்சு மௌனமாகி மௌனம் மனத்திலும், ஜீவனிலும், ஆத்மாவிலும், சைத்திய புருஷனிலும் ஆழ்ந்துறைதல் அவசியம். அல்பம், சொல்பம், சிறுமதி, கடுமை, கொடுமை, எரிச்சல், குழப்பம் ஆகியவை அறவே நீங்க வேண்டும். கடன் வாங்குவதை திருடுவதாக நினைப்பவர் ஏராளம். கடன் வாங்கினால் குடும்பம் அழிந்து விடும் என்று நம்புபவருண்டு. ரோடு, கல்வி, பணம், மின்சாரம், கம்ப்யூட்டர், விமானப் பயணம் முன்னேற்றத்தால் வந்தது போல கடன் நவநாகரீக ஸ்தாபனம். இன்று கடன் என்ற concept கருத்து அழிக்கப்பட்டால், ரோடில் பஸ், கார், லாரி, போகாது. கல்லூரிகளில் மாணவர் தொகை – கால்பாகமாகும். கடைத்தெரு சுருங்கி காலியாகும். புத்தகம் பிரசுரமாகாது. வாழ்வு 500 ஆண்டிற்கு முன்னிருந்ததைப் போலாகும். இது ஒரு மூட நம்பிக்கை. இன்று கல்லூரி மாணவி 9 கஜம் புடவையை மடிசாராக உடுத்துப் போவது போலாகும். திருமணம் அன்னை வழிபாட்டில் முக்கியமானது. திருமண வாழ்வு நம் உடலின் சக்தியை ஒன்றில் பத்தாகக் குறைப்பது உண்மை. திருமணமாகி, பிள்ளை பெற்று, குடும்பம் நடத்துபவன் அதை முக்கியமாகக் கருதி ஏற்பவன் யோகத்தில் முதலடியும் எடுத்து வைக்க முடியாது. திருமணமானாலும் பிரம்மச்சர்யத்தை ஏற்பவருண்டு. அவரும் குடும்பம் தன்னை ஆக்ரமிப்பதை அறிவார். அன்னையின் சிறந்த கருத்துகள் அவர் காதில் படாது. அந்த occupation ஆக்ரமிப்பை மீறி மனைவியுடன் தூய்மையான உறவு கொள்ள ஒருவர் முயன்றால் அதை விட மோட்சமடைவது எளிது எனத் தோன்றும். அது அத்தியாவசியம். அதற்கடுத்தபடி நம் மனம் ஊரால் ஆக்ரமிக்கப்பட்டுள்ளது. Ours is social consciousness. உலகை மனத்தால் கடக்க முடியாதவர்க்கு இந்த யோகமில்லை. Dilip Kumar Royபெரிய பாடகர். அவர் தகப்பனார் பிரபல நடிகர். Dilip நேருவின் நண்பன். சுபாஷ் சந்திர போஸூடன் கடிதப் போக்குவரத்துள்ளவர். 1934இல் நேரு புதுவை வந்தபொழுது Dilipயைப் பார்க்க விரும்பினார். பகவான் மறுத்து விட்டார். 1930, 1940 இல் ஆசிரம சாதகர்கள் ஒருவரையொருவர் நட்பு முறையில் சந்தித்துப் பேசக்கூடாது என்பது சட்டம். வேலைக்காகப் பேசலாம். இவை அடிப்படைச் சட்டங்கள். நம் அன்பர்கட்கு இவை ஒத்து வராது. அவரவர் சொந்தமாக யோகத்தை ஏற்கும் அளவுக்கு கட்டுப்பாடுகளை ஏற்கலாம். எந்த மந்திரமும் பகவான் எழுதிய மந்திரங்கள் உட்பட எதுவும் பயன்படுத்தக்கூடாது. Mother, Sri Aurobindo என்ற இரு மந்திரங்கள் தவிர மற்றவை மூட நம்பிக்கையாக மாறும். நான் கூறுவது: குறைந்தபட்ச சட்டங்களை மீறக்கூடாது. Rituals சம்பிரதாயங்கள் அறவே விலக்கப்பட வேண்டும். சத்தியம் சத்தியமாக வேண்டும்; சமூகத்தின் தவறான பழக்கங்களை – இலஞ்சம் – அறவே ஒழிக்க வேண்டும். செய்யும் தொழிலில் நேர்மையாக இருந்து உடனுறைபவர் skill திறமைகளை வளர்த்து, செயல்பட சுதந்திரமளித்து, தொழிலை விரிவுபடுத்துதல் சுபீட்சமான அடையாளம். கடனை முறையாகப் பயன்படுத்தி, அதனால் பயன் பெற்று, முறையாகத் திருப்பித்தர வேண்டும். கடன் வாங்க மறுப்பது அறியாமை, மூட நம்பிக்கை, ஜீவன் வளராத நிலைக்குரியது. சென்னை சேதத்தால் பாதிக்கப்பட்டவர் மனநிலையை மாற்றினால் வருமானத்தை 10 மடங்கு பெருக்க

முயன்றால் அது 100 அல்லது 1000 மடங்கு பெருகும். Receptivity வரும், இது அடிப்படையான தேவை. இம்முயற்சியில் ஒவ்வொரு கட்டத்திலும் நம் மனம் நம் வாழ்வை நிர்ணயிப்பதைக் காணலாம்.

80 days என்ற கதையை நான் விவரமாக எழுதியுள்ளேன். இருந்தாலும் கதையைப் படிப்பவர் Foggன் செயல்கள் அவர் மனத்தால் நிர்ணயிக்கப்படுவதைக் காணலாம். அவை நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் வரும். அதன் மூலம் நம் மனம் எப்படி நம் செயலை நிர்ணயிக்கிறது என அறியலாம். அதிலும் பல கட்டங்களுண்டு. மகனை எந்தக் கல்லூரியில் எந்தப் படிப்புக்கு அனுப்ப நினைத்தேனோ அதுவே நடந்தது எனக் காணலாம். இன்று என்ன டிபன் சாப்பிட விரும்பினேனோ அதுவே நான் கேட்காமல் – சில சமயம் கேட்டு – வந்ததையும் காணலாம். ஒரு புத்தகம் வாங்க விரும்பினேன். விசாரித்ததில் அது மார்க்கட்டிலில்லை, ஒரு வேளை சென்னையில் கிடைக்கலாம் என்றனர். கடைக்குப் போனால் அதே புத்தகம் 10 பிரதிகள் இன்று வந்துள்ளதைக் காணலாம். பெரியதும், சிறியதும் பிடிபடுவது ஒரு வகையில் Outline முழுவதும் பிடிபடுவதாகும் – இது பெரிய ஆரம்பம். பிறகு பல கட்டங்களாகப் பிரித்து ஒவ்வோர் கட்டத்திலும் ஒன்று பலிக்க முயன்றால் இதுவரை அதே போல் பல கட்டங்களில் பலித்தது தெரியும். நம் மனம் நம் வாழ்வை நிர்ணயிப்பது ஆரம்பித்து விட்டது. முடிக்க வாழ்நாள் போதாது. தத்துவப்படி அடுத்தகட்டம் நம் வாழ்வை நிர்ணயிப்பது நம் ஆத்மா. அவை பெரிய சித்திகளாகும். அதன் பின்னுள்ளது யோகம். யோகம் செய்யப் பிரியப்படாதவர் அனைவர் வாழ்வையும் யோகமாக்கும் சித்தி பெற்றவர். அவற்றைப் பயன்படுத்தாமலிருப்பது கடினம். நாம் நினைத்ததே பலிக்கும். நினைக்காததும் பலிக்கும். யார் MLAயும் ஆக முடியாதோ அவர் மந்திரியாவார். யோசனை செய்தால் ஒரு சமயம் அது நமக்கு வந்த எண்ணம் எனத் தெரியும். எண்ணம் பலிப்பது தவறில்லை. பலிக்க நினைப்பதைத் தவிர்ப்பது நல்லது. இந்நேரம் மற்றவர் நம்மைக் கண்டு “உங்கள் வார்த்தை பலிக்கிறது” என்பார்கள். உள்ளூரில் உள்ளவரை “நீ போய் பழைய ஊரிலேயே தங்கி விடேன்” என எதேச்சையாகக் கூறியது பலித்து பல ஆண்டுகள் அங்கேயே இருந்தார். ஒருவருக்கு பெரும் பணம் தேவை. சிறுபணமும் வரும் வழி எவர்க்கும் தெரியவில்லை. அவரிடம் ஓர் அன்பர், “உனக்குத் தேவையான அவ்வளவு பணமும் சாங்ஷனாகி சூட்சும உலகில் காத்துள்ளது. எனக்கு அதை உனக்குத் தரப் பிரியம். என் கையில் எதுவுமில்லை. உனக்குக் கொடுக்க எனக்குப் பணம் வரவேண்டுமென நீ பிரார்த்தனை செய்” என்றார். அவ்வளவு பணமும் வந்தது. அதைப் போல் 3 மடங்கும் வந்தது. அதன்பின் வருஷாவருஷம் அத்தொகை வர ஆரம்பித்து சிறிது சிறிதாக 10 மடங்காயிற்று. இவை அன்னையின் சுபீட்சம். எல்லா அன்பர் குடும்பங்களிலும் சிறு அளவிலும் மிகப்பெரிய அளவிலும் தொடர்ந்து நடப்பவை சிலவற்றை நாம் காண்கிறோம். எது யாருக்கு எந்த அளவில் பலித்தது எனத் தெரியாது. கடந்த காலத்தில் நம் வாழ்வில் நடக்காததே இல்லை. நாம் விவரமாக தெளிவாக அறியாததவையுண்டு. அன்பர்கட்குப் பிரச்சினையில்லை. இல்லாத வாய்ப்பில்லை. எங்கும் எவர்க்கும் இலஞ்சம் தர வேண்டியதில்லை. உடல் நலம் பாதிக்கப்படாது. உலகமே அன்பருக்கு நண்பர் குழாமாகும். யோசனை செய்தால் தெரியும். யோசனையே செய்யாவிட்டால் அதிகமாகப் புரியும். புரிவது பெரியது புரியாதது சொர்க்கம். நம் குழந்தைகள் வாழ்வை இப்பொழுது கவனித்தால் நாம் சிறு வயதில் பட்ட சிரமங்கள் இருக்கா. நாம் அனுபவிக்காத வாய்ப்புகளைக் காணலாம். பல ஊர் முன்னேற்றத்தால் வருபவை. சில பெரிய வாய்ப்புகள் அன்னையால் மட்டுமே வருபவை. அவை தெளிவாகத் தெரியும். ஓர் அன்பருக்குப் பல பிள்ளைகள். எல்லாப் பிள்ளைகளும் அவர் சிறு வயதில் அனுபவித்த பிரபலத்தை பல மடங்கு பெற்றனர். ஒரு பெண் அவள் ஸ்தாபனத்திலும் Star ஆகி விட்டாள். படிக்க அவளுக்குப் பிடிக்காது. ஒரு பையன் பெரிய புத்திசாலி. படிக்கவே மாட்டான். படிக்காமல் பாஸ் செய்ய, I Class வாங்கக் “கற்றுக் கொண்டான்”. ஊரில் பிரபலமானான். அவன் வயதில் அந்த அளவு பிரபலம் அடைந்தவர் அந்த ஊரிலில்லை. எந்த ஊரில் இருக்கிறார் எனத்

தெரியாது. இவ்வளவு திறமையும் நல்லபடியாகப் பயன்படுத்தும் அறிவு மட்டும் அவனுக்கில்லை. செய்தால் மாநிலத்தில் பிரபலம் பெறுவான். எதுவும் அன்பர் முயற்சியால் வரவில்லை. வருவதை ஏற்கலாம். எதுவும் செய்யும் நிலையில் அன்பரோ அவர் குடும்பமோ, அவ்விளைஞனோ இல்லை.

மனிதன் "மனம்" என அடிக்கடிப் பேசுவான். சற்று நிதானித்து மனம் என எதைக் குறிப்பிடுகிறான் என அவன் நினைத்துப் பார்த்தால் மனம் என்பது அவனுக்கு 'நான்' என்பதாகும். மனம் ஆயிரத்தில் ஒருவருக்கேயுண்டு. அவருக்கும் அது தெரியாது. நாம் பெரும்பாலும் உடல். பசி தூக்கம் களைப்பே நமக்கு முக்கியம். அது சுறுசுறுப்பானவர் சிறு வயதில் துருதுரு என இருப்பார்கள். சுறுசுறுப்பு 25, 30க்கு மேலிருக்காது. அவர்கள் vital பிராணன் உயிராலானவர். எதைச் சொன்னாலும் சிந்திப்பவருண்டு. அவருக்கு மனம் உண்டு. விஷயத்தில் சிந்தனையிலிருப்பது ஜட மனம். மற்றவரில் சிந்தனை vital mind உயிரின் மனம். பொருளையும், மனிதரையும் கடந்த விஷயம் அறிவுக்குரியது. எறும்புப் புற்று சுறுசுறுப்பானால் மழை வருகிறது என்பது ஓர் idea கருத்து. இதை அனைவரும் அறிவர். ஏன் என்று ஒருவர் நினைத்தால், அவர் சிந்திப்பவர். மழை வந்தால் எறும்பெல்லாம் சாகும், அதனால் மழை வருவதை அறியும் எறும்புகள் மழையால் பாதிக்கப்படாத இடம் – மரம் – போய்ச் சேர்கின்றன என அவர் கண்டால் அல்லது அது உண்மையானால் அவருக்கு மனம் உண்டு. அது சிந்திக்கிறது என அறியலாம். அதனால் மனம் என்பது என்ன என்று தெரிந்து கொள்வது முடியாது. மனத்தையறிய சத்திய ஜீவியத்தையடைய வேண்டும். 10 பேரை 9 பேர் என எண்ணியவனுக்கு தான் செய்த தவறு தெரியாது. ஏனெனில் எண்ணிக்கை மனத்தின் திறன். அவர்கள் உடலாலானவர்கள். உடலுக்கு மனத்தின் திறனில்லை. வெளியிலிருந்து வருபவரே அதைச் செய்ய முடியும். இதுவரை பகவான் எடுத்துக் கூறும் வரை மனத்தை அறிந்தவர் எவருமில்லை. அவர் விளக்கிய பின்னும் எவரும் மனம் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளவில்லை. நினைவை மனம் என்று அறிபவர் ஏராளம். சிந்தனையை மனம் என எவரும் ஒப்புக் கொள்வர். மனத்தின் பெரும் திறன் சிந்தனை. ஆனால் அது மனத்தின் ஒரு திறனாகும். நினைவு, பாகுபாடு, கற்பனை, எதிர்பார்ப்பது, தீர்மானம், முடிவு, கருத்து, சிந்தனை என மனத்தின் திறன்கள் 10 முதல் 20 வரையுண்டு. அஷ்டாவதானம், சதாவதானம் பயில்பவர் நினைவால் செயல்படுபவர். ஆத்மா மனத்தில் ஜனித்தால் மனிதன் genius மேதையாவான். ஆத்மா ஞாபகத்தில் பிறந்தால் அவரால் அஷ்டாவதானம் பயில முடியும். **Phileas Fogg** பயில்வது **Punctuality**. ஆத்மா அவருடைய punctualityயில் பிறந்ததால் அவருடைய punctualityக்கு முழுப் பவர் உண்டு. எந்தக் காரியத்தையும் சாதிக்கும் திறன் அவருடைய punctualityக்கு இருப்பதைக் கண்டோம். அவருடைய தோல்வி பெரு வெற்றியாயிற்று. **Punctuality** பந்தயத்தை 2 நாள் முன் ஜெயித்தது. ஓர் அற்புதமான இராணியை அவருக்குப் பந்தயப்பரிசாகக் கொடுத்தது. அவர் punctualityயினுள் பெருந்தன்மையும், ஒழுங்கும் உண்டு. **Generosity** £1000 பவுனை இருவருக்குப் பரிசாக அளித்தது. **Regularity gas bill** £27 பவுனைக் கழித்து விட்டது. பாஸபார்ட்அவுட்டிற்கு இந்த gas bill ஓராண்டு சம்பளம், skill என்பதை திறமை என்று கூறுகிறோம். எந்த அளவு இந்த skill செயல்படும் என்பது நடைமுறையில் காண்பவரே அறிவார். சிறு குழந்தைக்கு ஊசி போடும் டாக்டர் ஊசி போட்டதே குழந்தைக்குத் தெரியாமல் போடுவார் என்பது பல டாக்டர்களுடைய அனுபவம். ஒரு ஸ்தாபனத்தில் 50 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களில் 3 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர்கள் திருடுவார்கள். முதலாளி இளைஞன். அவனுடைய நண்பர்கள் இருவர் அவனைப் பார்க்க வந்தனர். ஸ்தாபனம் நிலம், சுற்றிப் பார்த்தனர். நண்பன் செய்த வேலையைப் பாராட்டினர், வியந்தனர். இந்த திருடர்கள் மூவரும் வரவில்லை, நண்பர்கள் போகுமுன் வந்தனர். இவர்களைப் பார்த்தவுடன் நண்பர்கள் இவர்கள் திருடர்கள் எனக் கூறினர். இந்த ஞானம் என் 1 to 9 பட்டியலில் 4ம் நம்பர். **Vital Mind** பிராணனின் மனம் எனப்படும். நடிகர்கள், பாடகர்கள், மேடைப் பிரசங்கிகட்கு இன்றியமையாத அறிவு இது. **Shrewdness** என

நம் மனமே நம்மை நிர்ணயிக்கிறது

ஆங்கிலத்திலும் சூட்சுமம் என வழக்கிலும் உள்ளது. மனத்தை அறிய விரும்புபவர் **1 to 9** என்ற அட்டவணையின் விளக்கத்தைப் படித்தால் பயன் பெறலாம். மகாத்மா காந்திஜிக்கு நாட்டின் நாடித்துடிப்பு தெரியும் என்பது அவருக்கு மக்கள் மனநிலை தெரியும் என்பதால். மனம் பெரிய சாஸ்த்திரம். **64** சாத்திரங்களை எழுதியது மனம். ஆனால் மனம் என்பதை மரபு விளக்கிக் கூறவில்லை. பகவான் கூறுகிறார். சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரிந்து அவற்றிடையே உற்பத்தியாவது மனம் என்பது பகவான் விளக்கம். காலத்தைக் கடந்த சத்திய ஜீவியத்தில் மனம் உண்டு. அங்கு ஞானி ஞானம் ஞானி அறிவது (**knower, knowledge, known**) ஆகிய மூன்றும் ஒன்றாக இருக்கிறது. காலத்தினுள் உள்ள சத்திய ஜீவியத்தில் அவை பிரிந்துள்ளன. ஞானி தான் எதை அறிகிறாரோ, எப்படி அறிகிறாரோ அதை அறிவார். மனம் பிரபஞ்ச சிருஷ்டியின் கருவி என பகவான் முடிக்கிறார்.

மூலம் : ஸ்ரீ கர்மயோகி
சொற்பொழிவாற்றியவர் : திருமதி. வசந்தா லட்சுமி நாராயணன்
சொற்பொழிவாற்றிய தேதி: 08.05.16

********